2009 ஜூலை 21]

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பொட்டாஷியம் குளோரேட்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை ஏற்கெனவே திரு. சின்னப்பன் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) பேசி விட்டார். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: விருதுநகர் மாவட்டத்தில் அது தட்டுப்பாடாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை திரு. சின்னப்பன், சொல்லிவிட்டார். அது பதிவாகி இருக்கிறது. உட்காருங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: நன்றி.

(அஎ) செங்கல்பட்டு தொகுதி, கல் குவாரிகளில் வெடிபொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

முற்பகல் 10–20

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலேயுள்ள கல் குவாரிகளில் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுவதால், அந்தப் பகுதியிலே உள்ள குடியிருப்புகளுக்கு நிறைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல, இன்றுகூட ஒரு செய்தி வந்திருக்கிறது. அங்குள்ள காவல் துறை அகாடமி கட்டடம்கூட அதிர்வதாக செய்தி வந்திருக்கிறது. இப்படி அதிகமான அளவிலே வெடிபொருட்களைப் பயன்படுத்துவதால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் பயந்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் செட்டிபுண்ணியம் என்ற இடத்தில் நேற்று மதியம் 2–00 மணிக்கு நான் வீட்டிலே இருந்தபோது, ஏற்பட்ட வெடிச் சத்தத்தினால், சாத்தப்பட்டிருந்த எங்கள் வீட்டு கதவு அதிர்ந்து தானாகத் திறக்கின்ற நிலை ஏற்பட்டது. எனவே, இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.